பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 44

21.07.2026

லஞ்சம் கேட்டு பெற்ற மின்வாரிய வயர்மேன் கைது

புகார்தாரர் திரு.சண்முகசுந்தரம், வயரிங் ஒப்பந்ததாரராக தென்காசி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர், திரு.நாகராஜ் என்பவரின் பெயரில் புதிய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்திருந்தார். புதிய மின் இணைப்புக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒரு புதிய மின்மானி ஒதுக்கப்பட்டது. புதிய மின்மானியை பொருத்த திரு.ஆறுமுகசாமி, வயர்மேன், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம், தென்காசி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.2,000/ லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென்காசி பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 21.07.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ஆறுமுகசாமி, வயர்மேன், லஞ்ச பணம் ரூ.2,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

PRESS RELEASE – 44
21.07.2026

EB WIREMAN ARRESTED FOR BRIBE

The complainant Tr.Shanmugasundaram is a wiring contractor and residing at Tenkasi district. He had applied for new electricity connection in the name of Tr.Nagarajan. The new electricity connection was approved, and a new electric meter was allotted to the new service connection of Tr.Nagarajan. For installation of the new meter, Tr.Arumugasamy, Wireman, Tamil Nadu Power Distribution Corporation Limited (TNPDCL), Tenkasi district demanded Rs.2,000/- as bribe. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Tenkasi detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (21.07.2026). During trap proceedings, Tr.Arumugasamy, Wireman, received the bribe amount of Rs.2,000/- from the complainant. The accused was arrested.